**CC.NO. 67/2019** தேதி**: 09.02.2026**

**(3,4,6,7,9,10,17,18** மற்றும் **31** வது எதிரிகள் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. )**

**(11** வது எதிரி ஆஜர்**.CC.No. 01/2024** ல் உள்ளார்**.)(5** மற்றும் **28** எதிரிகள் பிடிகட்டளையில் **CC230/2018**ல் உள்ளனர்**)**

**அசா 31 திரு. தாமோதரன் த/பெ கோதண்டராமன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி:**

நான் தஞ்சாவூர் CBCID குற்றவியல் காவல் ஆய்வளாராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 219 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 22.03.2002 ம் தேதி குற்ற வழக்கு தஞ்சை மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண் 8/2021 ல் மேலும் எதிரிகள் சேர்க்கப்பட்டது குறித்து தனிஅறிக்கையை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **அந்த தனிஅறிக்கை அசாஆ 220 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 13.7.2001. முதல் தகவல்அறிக்கை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் 14.07.2001. ஒரு நாள் கால தாமத்திற்கான சிறப்பு காரணம் எதுவும் குறிப்பிடவில்லை. சம்பவம் நடைபெற்ற கல்வி ஆண்டு 1999-2000 ம் ஆகும். ஆனால் புகார் கொடுக்கப்பட்டது 13.07.2001 அந்த கால தாமதத்தை குறித்து முதல் தகவல் அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியானவர்கள் கூட்டுறவு பட்டயப்படிப்பிற்காக அஞ்சல் வழியில் விண்ணபத்திருந்தார்கள். அந்த பட்டயப்படிப்பிற்கு SSLC அல்லது 12 வது வகுப்பு முடித்திருக்கவேண்டும். எதிரிகள் செந்தில் மற்றும் செந்தில் முருகன் 10 வகுப்பு படிந்திருந்தார். அப்போது எதிரிக்கு 15-16 வயது தான் இருக்கும். அவர்களுடைய பிறப்பு தேதியை நான் மாற்று சான்றிதழை வாங்கி பார்க்கவில்லை. அவர்கள் மைனர் என்பதால் அவருடைய பெற்றோர்களை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. 3 வருடம் வேலை பார்த்திருந்தால் தான் அஞ்சல் வழி பட்டயவகுப்பில் சேர முடியும் என்றால் சரிதான்.

2. 10 மற்றும் 11 வது எதிரி, புகார்தாரர் விண்ணப்பம் ரூ. 100/- கொடுத்து வாங்கும்போது அவரிடம் அனுபவ சான்றிதழ் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அதுபோல் கவுண்டரில் விண்ணப்பம் கொடுத்தவர் தியாகராஜன் என்பவரிடம் மனுவை கொடுக்க சொன்னதன் பேரில் தியாகராஜன் என்பவரிடம் 10 வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுசான்றிதழ் பூர்த்தி செய்யப்படாமல்

விண்ணப்பத்தில் மட்டும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வேலை பார்த்தற்கான சான்றிதழ், போலி முத்திரைகள் , ஊதிய சான்று , பயிற்சி சான்று, ஆகியவை பற்றி 10 மற்றும் 11 வது எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதுபோல தியாகராஜன் என்பவரை விசாரிக்கவில்லை எதிரியாகவும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 81 விசாரணை அறிக்கையில் செந்தில்முருகன் பட்டயவகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பம் தியாகராஜன் என்பவரிடம் கொடுத்தேன் என்று தெரிவித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 81விசாரணை அறிக்கையை சரிவர படிக்காமல் எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வேலை பார்த்தற்கான சான்றிதழ், போலி முத்திரைகள் , ஊதிய சான்று , பயிற்சி சான்று 1 வது எதிரி ராஜீ என்பவர் தான் தயாரித்துள்ளார் என்று 81 விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதனால் 10 மற்றும் 11 வது எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குற்றமில்லா செயல் குற்றமாவதில்லை, அந்த 15 வயதில் ஒரு போலி ஆவணம் வேலை பார்த்தற்கான சான்றிதழ், போலி முத்திரைகள் , ஊதிய சான்று , பயிற்சி சான்று தயாரிக்க எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

3. நேர்முக பயிற்சி வகுப்புகள் வாரத்தில் எத்தனை நாட்கள் நடைபெறும் என்ற விவரம் எனக்கு தெரியாது. பத்தாவது மற்றும் பதினொன்வது எதிரிகள் அந்தவகுப்பில் கலந்து கொண்டதற்கான வருகை பதிவேடு பார்த்தீர்களா கைப்பற்றினீர்களா என்றால் எனக்கு இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பதால் விசாரிக்கவில்லை. வகுப்பில் சேர்ந்ததிருலிருந்து 10 மற்றும் 11 எதிரிகள் வகுப்பிற்கு ஆஜர் ஆகவில்லை என்றால் அது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை. அது பற்றி விசாரித்து இருந்தால் 10 மற்றும் 11 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல நிருபணம் ஆகியிருக்கும் என்றால் சரியல்ல. 1999–2000 இதற்கு முன்பு போலி ஆவணங்கள் கொடுத்து இதே போன்று பயிற்சி வகுப்பில் சேர்ந்துள்ளார்களா என்றால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை. 2 வதாக கொடுக்கப்பட்ட 81 விசாரணை அறிக்கையில் 10 மற்றும் 11 எதிரிகளின் பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான். இந்தகுற்ற செயலில் முழுக்க ஈடுபட்டது தஞ்சை சுவாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் வேலை பார்த்த ராசு, ரெங்கராஜ் தான் காரணம் என்றால் அவர்களும் ஒரு காரணம் என்று சொன்னால் சரிதான்.

4. 1 வது எதிரி ராசு என்பவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன். வேலை பார்த்தற்கான சான்றிதழ், போலி முத்திரைகள் , ஊதிய சான்று , பயிற்சி சான்று,

தீர்மானம் 1 வது எதிரி ராசு என்பவர் தயார் செய்து தாக்கல் செய்ததாக தன்னுடைய வாக்குமூலத்தில் ஒப்புகொண்டுள்ளார் என்றால் சரிதான். நீங்கள் மொத்தமாக எத்தனை மாணவர்கள் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 25 பேர் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இதில் 17 பேர் மட்டும் நன்னடத்தை அடிப்படையில் விடுவிக்கபட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தஞ்சை சுவாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலைய அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க வழக்கை தாக்கல் செய்துள்ளேன் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 10 மற்றும் 11 வது எதிரிகள் கடந்த 20 வருடத்திற்கு மேலாக நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறார்கள் தவறு செய்யாத காரணத்தால் எதிரிகள் சட்டப்படி நடந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்– S.T.கனிமொழி.,L.L.M
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.